திருப்பத்தூர் மாவட்ட கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 1752/அ3/2020 நாள் 12.10.2020

பொருள்: தேர்வுகள் – மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு மார்ச் 2020 – அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் தேர்வர்களுக்கு வழங்குவது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை: சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின்கடிதம் ந.க.எண் 127311/எச் 1/2020 நாள் 09.10.2020

------------------

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ஆணையின்படி மார்ச் 2020 நடைபெற்று முடிந்த மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு எழுதி தேர்வர்களுக்கு அசல் மதிப்பெண் பட்டியல் ***திருப்பத்தூர் தோமினிக் சாவியோ மேல்நிலைப்பள்ளியில்*** 13.10.2020 செவ்வாய்க் கிழமை கீழ்காணும் அட்டவணையின் படி வழங்கப்படவுள்ளது. தங்கள் பள்ளியில் பயின்ற அனைத்து மாணாக்கரின் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ள சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் முகப்பு கடித்த்துடன் தேர்வர்களின் எண்ணிக்கை விவரத்துடன் வருகை புரிந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

| வ.எண் | பள்ளி எண் | நேரம் |
|---|---|---|
| 1 | TPTR0001 முதல் TPTR 0030 வரை | காலை 10.00 மணி |
| 2 | TPTR0031 முதல் TPTR 0100 வரை | காலை 11.00 மணி |
| 3 | TPTR0101 முதல் TPTR 0138 வரை | நன்பகல் 12.30 மணி |

அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்க தலைமையாசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை சார்ந்த அறிவுரைகள் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது. இணைப்பில் கண்ட அறிவுரைகளை பின்பற்றி செயல்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 14.10.2020 அன்று தங்கள் பள்ளி மாணவர்களுக்கு அசல் மதிப்பெண் சான்றிதழ்களை வழங்கிய விவரத்தை 15.10.2020 அன்று மாலைக்குள் திருப்பத்தூர் மாவட்ட கல்வி அலுவலகத்தில் சான்று படிவத்ததை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட கல்வி அலுவலர்

திருப்பத்தூர்.

பெறுநர்

அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்

மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்